# நாத்தாண்டிய பிரதேச சபை
# புத்தளம் மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2013 மார்ச் 22 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 30 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 நவம்பர் 07 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, நாத்தாண்டிய பிரதேச சபை 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்குப் பதிவேடுகளை பேணியிருந்தது என்றும், எனது அறிக்கையில் காட்டப்பட்டுள்ள விடயங்களால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நாத்தாண்டிய பிரதேச சபையின் நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நிதி விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) ரூபா 1,730,000 தொகையான செலவில் நிர்மாணிக்கப்பட்டிருந்த வீரஹேன மயானத்தின் பெறுமதியும் தெமடபிட்டிய சந்தைக் காணி, 9 பிரதேச சபைக்குரிய நூலகக் கட்டிடங்களும், நாத்தாண்டியா நகர

சபைக் கட்டிடம், 02 நீர்ச் செயற்திட்டங்களும், நாத்தாண்டியா விற்பனைத் தொகுதி, மாரவில நவீன சந்தைத் தொகுதி, தெமடபிட்டிய சந்தைத் தொகுதி மற்றும் ஹால் பன்வில கடைகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் நிலுவை முத்திரைக் கட்டணத்திற்காகக் கிடைக்கப்பெற்ற ரூபா 1,000,000 பெறுமதியான தொகை வருமானக் கடன்பட்டோர் கணக்கில் கணக்கீடு செய்யப்படாது மிகை∴ பற்றாக்குறைக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதன் மூலம் கடன்பட்டோரும் திரண்ட நிதியமும் அதிகரித்துக் காணப்பட்டது.

(இ) 2006 ஆம் ஆண்டிற்கு உரித்தான ரூபா 11,552,637 தொகையான நிலுவையான முத்திரைக் கட்டணம் கடன்பட்டோர் கணக்கிற்கும் திரண்ட நிதியத்திற்கும் கணக்கீடு செய்யப்படாதிருந்தமையால் வருமானக் கடன்பட்டோரும் திரண்ட நிதியமும் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட பெறுமதி சேர் வரியிலிருந்து செலவினத்திற்காக ஏற்கப்பட்ட உள்வரி தீர்க்கப்பட்டதை அடுத்து மிகுதி உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்ட போதிலும் தீர்க்கப்பட்ட ரூபா 8,208,838 தொகையான வரி அளவு உரிய நிகழ்ச்சித்திட்டங்களுக்கிடையே ஒதுக்கப்படாது மேலும் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு செலுத்த வேண்டியதாகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் தவறான பொறுப்பு ஏற்பட்டிருந்தது.

(உ) 2005 ஆம் ஆண்டின் கணக்குகள் தயாரிக்கப்படுகையில் கணக்காய்வு செய்யப்பட்டிருந்த ரூபா 9,476,772 தொகையான உப அலுவலகத்தில் நிலுவையாகக் காணப்பட்ட வரி மீதி முறையான அங்கீகாரத்துடன் கணக்குகளிலிருந்து அகற்றப்பட்டிராத காரணத்தால் தவறான வருமானக் கடன்பட்டோர் மீதி கணக்குகளில் உருவாகியிருந்தது.

(ஊ) நிலையான சொத்துக்களில் உள்ளடக்கப்பட்டிருந்த ரூபா 106,775 பெறுமதியான 14 வண்டிகளின் பௌதீக நிலைப்பாடு கணக்காய்வின் போது உறுதிப்படுத்தப்பட முடியாதிருந்தது.

(எ) ஐந்தொகையில் காணப்படும் ரூபா 21,076,019 தொகையான காசு மீதியில் 2001 ஆம் ஆண்டு முதல் 2010 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது மதிப்பிழந்த 12 காசோலைகளின் பெறுமதியான ரூபா 838,619 தொகையும் உள்ளடக்கப்பட்டிருந்தது.

1.3.2 **கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

(அ) ரூபா 276,365,498 தொகையான 04 நிலையான சொத்து விடயங்களுக்கு உரித்தான நிலையான சொத்துப் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிராததுடன் அவற்றிற்கு உரித்தான மெய்மையாய்வு அறிக்கைகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிராமையால் ரூபா 223,812,715 கூட்டுத்தொகையான கொடுக்கல்வாங்கல்கள் கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிவிளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 56,557,906 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 39,335,265 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 17,690 | 10,135 | 30,638 |
| (ii) | வாடகை | 11,725 | 19,154 | 3,152 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 1,555 | 1,094 | 97 |
| (iv) | ஏனைய வருமானம் | 89,307 | 54,900 | 132,509 |

### 2.2.2 வீதவரி

மீளாய்வாண்டின் போது பட்டியலிடப்பட்ட வீத வரி வருமானம் ரூபா 16,152,705 தொகையானதுடன் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 9,070,143 ஆகக் காணப்பட்டது. மீளாய்வாண்டிற்காக பட்டியலிடப்பட்ட வருமானத்தில் ரூபா 7,608,449 தொகையும், நிலுவை வருமானத்தில் ரூபா 1,461,694 தொகையும் அவ்வாறு சேகரிக்கப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது மதிப்பிடப்பட்ட வருமானத்தில் 51% மாத்திரமே சேகரிக்கப்பட்டிருந்தது.

## 2.2.3 ஏனைய வருமானங்கள்

மீளாய்வாண்டின் மதிப்பிடப்பட்ட ஏனைய வருமானம் ரூபா 89,307,000 தொகையானதுடன் ரூபா107,431,029 தொகை பட்டியலிடப்பட்டிருந்தது. இதில் ரூபா 54,900,344 தொகை சேகரிக்கப்பட்டிருந்ததுடன் அதன் சதவீதம் 51% ஆகக் காணப்பட்டது.

## 2.2.4 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (அ) | நீதிமன்றத் தண்டப் பணம் | 8,169,436 |
| (ஆ) | முத்திரைக் கட்டணம் | 118,208,924 |

## 2.2.5 வாடகை

2004 தொடக்கம் 2011 ஆம் ஆண்டு வரை 23 வாடகையாளர்களிடமிருந்து அறவிட வேண்டிய நிலுவை வாடகை ரூபா 1,081,223 ஆக இருந்தது. இதில் 14 வாடகையாளர்களுடன் வாடகை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிராமையால் வாடகையாளர்களிடமிருந்து அறவிட வேண்டியிருந்த ரூபா 952,411 தொகையினை அறவிடுவதற்காக நிச்சயமற்ற நிலை காணப்பட்டது.

## 2.3 மிகைக் கட்டணம்

1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் பொறுப்பானவர்களுக்கு எதிராக என்னால் முன்னைய ஆண்டுகளின் போது விதிக்கப்பட்ட மிகைகட்டணங்கள் தொடர்பாக 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான ரூபா 1,805,437 தொகை அறவிடப்பட முடியாதிருந்தது.

## 2.4 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

2002 ஆம் ஆண்டின் போது மாட்டைக் கொல்லும் இடத்தை நிர்மாணிப்பதற்காக ஓர் இடத்தைக் கொள்வனவு செய்வதற்கு 04 பேருக்கு ஒருவருக்கு ரூபா 150,000 படி ரூபா 600,000 தொகை முற்பணமாகச் செலுத்தப்பட்டிருந்த போதிலும் இது வரை அவ்விடத்தின் உரித்தைப் பெற்றுக்கொள்வதற்கோ அல்லது அப் பணத்தை மீள அறவிட்டுக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.5 செயற்பாட்டுத் திறமையீனங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) வருடாந்த பாதீட்டின் மூலம் 2 நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சுகாதார சேவை திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 2,000,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அச் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு சபை தவறியிருந்தது.

(ஆ) 2000 ஆம் ஆண்டு முதல் 2004 திசெம்பர் 31 வரை இலங்கை மின்சார சபையின் வென்னப்புவ மின்சாரப் பொறியியலாளரால் வீதி மின்விளக்கு மீள்நிரப்பு பணமாக ரூபா 1,167,000 தொகை சபைக்குக் கிடைக்கப்பெற வேண்டியதாகக் காணப்பட்டது.

(இ) உள்ளூராட்சி பேரவையால் 1999 ஆம் ஆண்டின் போது பெறப்பட்டிருந்த ரூபா 100,000 தொகை மீளப் பெற்றுக்கொள்ளப்படுவதற்கு செயற்பட்டிராததுடன் 2007 ஆம் ஆண்டு முதல் பெறவேண்டிய வட்டித் தொகைக் கணிப்பீடும் கைவிடப்பட்டிருந்தது.

## 2.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

(அ) சபைக்குரிய சொத்துக்களில் இருந்து பெற்றுக்கொள்ளக் கூடிய வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணத்தை அதிகரித்துக் கொள்வதற்கு திட்டங்கள் வகுக்கப்பட்டிராததுடன் 2012 பாதீட்டின் மூலம்

எதிர்பார்க்கப்பட்ட மேற்குறித்த வருமானத்தை அறவிட முடியாதிருந்தமையால் பாதீட்டு இலக்கை எய்த முடியாதிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவினத்திற்காக ரூபா 46,800,000 தொகை ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் சுகாதார சேவைகள், நீர் சேவைகள் மற்றும் ஏனைய துணைச் சேவைகளுக்காக கூடிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(இ) வருடாந்தம் செயற்பாட்டுத்திட்டம் தயாரிக்கப்பட்டிராத போதிலும் பாதீட்டின் மூலம் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்கள் எய்தப்படுவதற்கான குறித்த கால வரையறை தயாரிக்கப்படுவதற்கு முடியாதிருந்தது.

**3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்**

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்